செய்தி வெளியீடு எண்.52 நாள்.23.01.2017

**திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் முதுகூர் கிராமத்தில் (உளுந்தை -II) பகுதிகளில் மத்திய குழுவை சேர்ந்த டாக்டர்.பி.கணேஷ் ராம், திரு. ரத்ன பிரசாத், டாக்டர். பால் பாண்டியன் ஆகியோர் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் முதுகூர் கிராமத்தில் (உளுந்தை-II) பகுதிகளில் மத்திய குழுவை சேர்ந்த டாக்டர்.பி.கணேஷ் ராம், திரு. ரத்ன பிரசாத், டாக்டர். பால் பாண்டியன் ஆகியோர் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களை இன்று (23.01.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மத்திய குழுவினர் வறட்சி தொடர்பான புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டு விளக்கங்களை கேட்டறிந்தனர். வறட்சி தொடர்பான சிறப்பு வீடியோ படக்காட்சியையும், பிரசன்டேசன் ஆகியவற்றையும் பார்வையிட்டனர். பின்னர் வறட்சி பாதித்த நெற்பயிர்கள் மற்றும் நிலங்களை பார்வையிட்டு விவசாயிகளிடம் அவர்களின் குறைகளை கேட்டறிந்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது “மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களில் 9 ஊராட்சி ஒன்றியங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 6114.9 ஹெக்டேர் நெற்பயிர்கள் வறட்சியால் சேதமடைந்துள்ளது. மத்திய குழுவினர் முதுகூர் கிராமத்தில் (உளுந்தை -II) இன்று நேரில் பார்வையிட்டனர் ஆய்வு மேற்கொண்டனர். மத்திய குழுவிடம் விரிவான அறிக்கை வழங்கப்பட்டுள்ளது” என்று கூறினார்.

இந்த ஆய்வின்போது ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) டாக்டர். சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஈ.டி.சாம்சன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வி.மகேந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~